DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# OS.No. 183/2020

Deposition of Witness : PW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.சுந்தரமூர்த்தி | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | தியாகராஜன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 26.11.2024.

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்).**
**சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**பி.த.கு.வி.: தொடர்ச்சி**

| | | |
|---|---|---|
| கேள்வி | : | இந்த வழக்கு சொத்தின் நகர சர்வே எண் என்ன? |
| பதில் | : | தெரியாது. |
| கேள்வி | : | பிராது சொத்து ஆரம்பத்தில் சின்னாத்தேவர் என்பருக்கு பாத்தியமானது? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | சின்னாத்தேவருக்கு பெரியகருப்பதேவர் மற்றும் சின்னாத் தேவர் என்ற இரு மகன்கள் உண்டு? |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | மேற்படி இரு மகன்களும் 17.08.1965 ல் பாகப்பாத்திய விடுதலை பத்திரம் எழுத்கொண்டார்கள் என்றால்? |
| பதில் | : | தெரியாது. |
| கேள்வி | : | பெரிய கருப்பத்தேவர் அப்பா சின்னாத் தேவர் எப்போது இறந்தார்? |
| பதில் | : | தெரியாது |
| கேள்வி | : | சின்னாத்தேவர் மகன் சின்னாத்தேவர் எப்போது இறந்தார்? |
| பதில் | : | தெரியாது |
| கேள்வி | : | பெரிய கருப்பத்தேவரின் சொத்தை பிரதிவாதி சின்னச்சாமி 20.11.1997 |

| | | |
|---|---|---|
| | | அன்று கிரையம் பெற்றார் என்றால்? |
| பதில் | : | தெரியாது. |
| கேள்வி | : | பெரியகருப்பத்தேவர் விற்ற சொத்துதான் வழக்கு சொத்து என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | பிரதிவாதி பெரியகருப்பத்தேவரிடம் பெற்ற சொத்தை தான் உட்பிரிவு செய்து பிரதிவாதி தன் பெயரில் பட்டா பெற்றுள்ளார் என்றால் ? |
| பதில் | : | சரியல்ல |
| கேள்வி | : | 29.05.2006 ஆம் தேதி பிரதிவாதி சின்னச்சாமி தாவா சொத்தை அறிவுக்கொடி என்பவருக்கு விற்று விட்டார் என்றால்? |
| பதில் | : | தெரியாது. |
| கேள்வி | : | தாவா சொத்து சம்பந்தமான வில்லங்கச் சான்றிதழ் உங்கள் தரப்பில் எதுவும் குறியீடு செய்யவில்லை என்றால் |
| பதில் | : | சரிதான் |
| கேள்வி | : | தாவா சொத்து உங்கள் இடம் தான் என குறிப்பிட்டு சொல்வதற்கு பிராதில் சொல்லப்பட்ட சொத்து விபரத்தின் வடக்கு பக்கம் லட்சுமி அம்மாள் என மால் குறிப்பிடப்பட்டுள்ளதை வைத்துதான் தாவா சொத்து உங்களுக்கு சொந்மானது என்றால்? |
| பதில் | : | சரிதான். |
| கேள்வி | : | சர்வே எண் 165/2 ல் உள்ள மொத்தம் 4 ஏக்கர் 22 சென்ட்டில் மேலே சொன்ன லட்சுமி அம்மாள் பெயர் மாதிரி நிறைய லட்சுமி அம்மாள் பெயர் உண்டு என்றால்? |
| பதில் | : | தெரியாது. |
| கேள்வி | : | உங்கள் சொத்து வடக்கு மாலில் உள்ள லட்சுமி அம்மாளை தெரியுமா |
| பதில் | : | தெரியாது. |
| கேள்வி | : | தாவா சொத்தை பொறுத்து நீங்களும் உங்களுக்கு முன் சொல்லப்பட்டு தாவா சொத்து சம்பந்தமான பெயர்களும் பத்திர அளவில்தான் பதிவு செய்யப்பட்டது என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | தாவா சொத்தை நீங்கள் நேரடியாக பார்க்கவில்லை அளந்தும் வாங்கவில்லை என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |
| கேள்வி | : | நீங்கள் கேட்கும் எந்த பரிகாரமும் கிடைக்ககூடியது அல்ல என்றால்? |
| பதில் | : | சரியல்ல. |

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 26.11.2024 அன்று செவ்வாய்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2024.11.26 19:24:39 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
26.11.2024.